Crl.Misc/ 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, VALANGAIMAN

Calendar Case No.**STC.50/2022**
Miscellaneous
Preliminary Register
Deposition of PW-1 /

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மதனகோபால் | Father Name | : | பாஸ்டின் |
| Village | : | செம்மங்குடி | Taluk | : | |
| Caste | : | | Calling | : | CRC ஓட்டுநர் (ஓய்வு) |
| Religion | : | | Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of October 2023.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை,

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். இவ்வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டதாகும். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன். (இவ்வழக்கின் எதிரி கடந்த 31.03.2022 ம் தேதி வழங்கிய பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளையில் காசோலையின் அசல் **பு.சா.ஆ.1** ஆகவும், கடந்த 31.03.2022 ம் தேதி வழங்கிய பாரத ஸ்டேட் வங்கி வலங்கைமான் கிளையில் எதிரி கணக்கில் போதிய தொகை இல்லை என்று வழங்கிய Return Memo அசல்

**பு.சா.ஆ.2** ஆகவும், எதிரிக்கு மனுதாரர் வழக்கறிஞர் மூலமாக கொடுத்த 13.04.2022 ம் தேதியிட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **பு.சா.ஆ.3** ஆகவும், எதிரி மேற்படி கடந்த 30.04.2022 ம் தேதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் **பு.சா.ஆ.4** ஆகவும், புகார்தாரரின் ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **பு.சா.ஆ.5** ஆகவும், அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி கடந்த 26.04.2022 ம் தேதியிட்ட கொடுத்த பதிலறிவிப்பின் அசல் **பு.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.) புகார்ப்படி தீர்ப்பாகுமாறு வேண்டுகிறேன்.